சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 4/2017

பெயர் திரு. செல்வம் த/பெ. சண்முகம் நாயக்கர் நாள்.30.09.2024

**<u>வாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன். விவசாய தொழில் செய்து வருகிறேன். நான் பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்குச் சொத்தை என் தாத்தா காலம் முதல் அனுபவித்து வருகிறோம். என் தாத்தா பெயர் கெங்கப்ப நாயக்கர். என்னுடைய தாத்தாவும், செங்கமல நாயக்கரின் தகப்பனாரும் சகோதரர்கள். செங்கமல நாயக்கரின் தகப்பனார் பெயர் தெரியாது. செங்கமல நாயக்கரும், என் தாத்தாவும் சகோதர்கள் என்பதை நிருபிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. செங்கமல நாயக்கரும், என் தாத்தாவும் எந்த தேதியில் வாய் மொழியாக பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்ற விவரத்தை பிராது மற்றும் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். செங்கமல நாயக்கரும், என் தாத்தாவும் சகோதர்கள் அல்ல என்றாலும், இருவரும் வெவ்வேறு ஊரைச் சேர்ந்தவர்கள் என்று சொன்னாலும் சரியல்ல. 2 முதல் 6 பிரதிவாதிகளின் தகப்பனார் மற்றும் அவரது குடும்பத்தைப் பற்றி எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியும். செங்கமலநாயக்கருக்கு எத்தனை மனைவிகள், எத்தனை பிள்ளைகள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. முதல் இரண்டு மனைவிகள் பெயர் தெரியாது. 3வது மனைவி பெயர் நாகம்மாள். செங்கமல நாயக்கருக்கு பத்மாவதி, பூபதி, ரங்கநாயகி, சரசு, வேலழகன், குருநாதன், சீனிவாசன், ஆறுமுகம் மற்றும் கௌரி ஆகியோர் பிள்ளைகள்.

2. மேற்கண்ட நபர்களுக்கு வழக்குச் சொத்தில் உரிமை உள்ளது என்றால் சரிதான். அவர்கள் அனைவரையும் ஏன் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் மறந்துவிட்டேன். வா.த.சா.ஆ.1ல் என் தகப்பனாருக்கும்,

செங்கமல நாயக்கருக்கும் ஏற்பட்ட பாக ஏற்பாடு பற்றி குறிப்பிடவில்லை. வழக்குச் சொத்துக்கள் ஆதியில் சின்னகுழந்தை நாயக்கருக்கு அனுபவமாக இருந்து, பின்னர் அவரது மகன் செங்கமல நாயக்கருக்கு பாத்தியப்பட்டு அதன் பின்னர் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. செங்கமலநாயக்கர் எவ்வாறு என் தந்தை வழி மாமன் என்றால் என் தகப்பனாரின் சகோததர் ஆவார். நானோ, என் மூதாதையரோ செங்கமலநாயக்கருடன் எவ்வித உறவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

3. செங்கமல நாயக்கருக்கும், என் தகப்பனாருக்கும் எப்பொழுது கூட்டு பட்டா கொடுத்தார்கள் என்றால் என் தகப்பனார் இறந்தபிறகு செங்கமல நாயக்கர் மற்றும் என் சகோதரர் பெயருக்கு கூட்டுப் பட்டா வழங்கப்பட்டது. அது எப்பொழுது என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை நான் பார்க்கவில்லை. ஆதியில் செங்கமல நாயக்கருக்குதான் வழக்குச் சொத்திற்கான பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. எக்காலத்திலும் சண்முகம் மகன் முருகையன் பெயருக்கு வா.த.சா.ஆ.2 அளிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. என் சகோதரர் வருவாய்த்துறை அதிகாரிகளுடன் சேர்ந்து பட்டா வாங்கி விட்டார் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.4 புகைப்படங்கள் எப்பொழுது யாரால் எங்கு வைத்து எடுக்கப்பட்டது என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ.4 சாட்சிய சட்டம் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டதல்ல என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்கள் இவ்வழக்கிற்கு எவ்வித தொடர்பும் இல்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்திற்கு அருகில் 16 சென்ட் இடத்திற்கு என் தகப்பனார் பெயரில் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் சகோதர் பெயரில் பட்டா தவறுதலாக வழங்கப்பட்டது என்றாலும், அதனால் பிரதிவாதிகள் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்து அதன் பேரில் விசாரணை நிலுவையில் உள்ளது என்று சொனனாலும் எனக்கு தெரியாது.

எனக்கு அந்த விவரம் தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் ன்றாலும் சரியல்ல.வழக்குச் சொததை நானோ என் மூதாதையர்களோ அல்லது என் குடும்ப உறுப்பினர்களோ அனுபவம் செய்தது கிடையாது என்று சொன்னால் சரியல்ல.  வழக்கு சொத்தில் நாங்கள் எவ்வித கட்டுமானங்களோ கட்டியது கிடையாது என்றாலும், வழக்குச் சொத்திற்கும் எங்களுக்கும் எவ்வித உரிமையும் கிடையாது என்று சொன்னாலும் சரியல்ல. வா.த.சா.ஆ.3 ல் புல எண்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

4. மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த மனுவினை முறியடிப்பதற்காக தவறுதலாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.  வழக்குச் சொத்து முட்புதருடன் இருந்தது என்றாலும், அதனை பாகம் பிரிப்பதற்காக சென்றபோது நாங்கள் தகராறு செய்து அனுபவத்தை தடை செய்தோம் என்றாலும் சரியல்ல.  விளம்புகை பரிகாரம் கோரமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அவசிய தரப்பினர்களை சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கிற்கு வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய வழக்கு தள்ளுபடி  செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.